**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**OS.No.96/2019 - PW-1**

| | |
|---|---|
| Name | திருமதி.ராணி |
| Husband/Father Name | திரு.லேட்.முனியாண்டி |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **06.04.2026.**

**3-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

என் கணவர் 2000-ம் வருடத்தில் ஏப்ரல் மாதத்தில் இறந்தார். தேதி ஞாபகமில்லை. என் கணவரின் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். என் கணவர் இறப்பதற்கு முன்பு லாரி ஓட்டுநராக வேலை செய்து வந்தார். எனக்கு எந்த வருடம் திருமணமானது என்று ஞாபகமில்லை. எனக்கு திருமணமாகி ஒரு வருடத்தில் ஆற்காட்டிலுள்ள கே.கே.நகரில் தனிக்குடுத்தனம் சென்றுவிட்டோம் என்றால் நாங்கள் தனிக்குடுத்தனம் செல்லவில்லை. நானும், என் கணவரும், 1 மற்றும் 3 பிரதிவாதிகளுடன் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தோம் என்பதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1 மற்றும் 3 பிரதிவாதிகள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. நான் ஆற்காடு வட்டம், மாசாப்பேட்டை, அண்ணாநகர் II, க.எண்.52/26-ல் வசிக்கிறேன் என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த முகவரியுடன் உள்ள குடும்ப அட்டை என் வீட்டில் உள்ளது. ஆதார் அட்டையில் எவ்வாறு உள்ளது என்று எனக்கு தெரியாது. எனக்கு எழுத படிக்கத் தெரியாது. என் கணவர் இறக்கும் வரை 1 மற்றும் 3 பிரதிவாதிகளிடம் பாகப்பிரிவினை செய்து தர கேட்கவில்லை. என் கணவரும், 3-ம் பிரவாதியும் சிறு வயதாக இருந்த போதே என் மாமனார் லட்சுமணன் நாயக்கர் இறந்துவிட்டார் என்றாலும், என் கணவர், 3-ம் பிரதிவாதி, அவர்களது சகோதரிகள் இந்திரா மற்றும் இறந்து போன பெருந்தேவி ஆகியோரை அவர்களது தாயாரான 1-ம் பிரதிவாதி தான் வளர்த்து பராமரித்து வந்துள்ளார் என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி தான் குடும்பத்தை நிர்வகித்து அவரது பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைத்துள்ளார் என்றால் சரிதான். குடும்ப செலவிற்காக 1-ம் பிரதிவாதி சொத்தை அடமானம் வைத்தும், வேறு கடன்களும் பெற்றும் பின்னர் பைசல் செய்துள்ளார் என்றால் அவர் கடன் எதுவும் வாங்கவில்லை. வழக்கு சொத்துகளின் சர்வே எண்கள், விஸ்தீரணம்

எனக்கு தெரியாது. வழக்கு சொத்துகள் ஆற்காடு மாசாப்பேட்டை மற்றும் வேப்பூரிலுள்ளது. வழக்கு சொத்துகளுக்கு 4 எல்லைகளும் எனக்கு தெரியும். அந்த சொத்துகளுக்கு 4 திசைகள் எனக்கு சரியாக தெரியாது. ஆற்காடு மாசாப்பேட்டை சொத்திற்கு 4 பகுதிகளிலும் யாருடைய சொத்துகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. 1993-ம் ஆண்டில் என் கணவர் சொந்தமாக லாரி வாங்க வேண்டும் என்று சொல்லி அசையா சொத்துகளுக்கு ஈடாக அவரது பங்கிற்கு ரூ.2 லட்சம் மதிப்பீடு செய்து அந்த தொகையை பஞ்சாயத்தார் முன்னிலையில் 1 மற்றும் 3 பிரதிவாதிகளிடம் பெற்றுக் கொண்டு குடும்பத்திலிருந்து பிரிந்து சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. என் கணவர் பணம் எதுவும் அவர் பங்கிற்கு வாங்கவில்லை. கூட்டுக்குடும்பமாக தான் இருந்தோம். என் கணவர் 2000-ம் வருடத்தில் இறந்த பின்பு இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வரை நான் பாகம் கேட்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். என் மாமியார் பாகம் பிரித்து தருவதாக சொல்லி வந்ததால் நடவடிக்கை எடுக்கவில்லை. என் மாமியார் என் கணவரின் பாகத்தை பிரித்து தருவதாக சொன்னதாக என்னுடைய வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் 2003-ம் ஆண்டிலிருந்து சொந்தமாக காய்கறி கடை வைத்து நடத்தி வருகிறேன் என்றால் காய்கறி கடையில் கூலி வேலை செய்து வருகிறேன். நான் சொல்வது தவறு என்றாலும், சொந்தமாக காய்கறி கடை வைத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. 1-ம் பிரதிவாதியான என் மாமியாருக்கு 2 முறை இருதய கோளாறு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பும், பின்பும் நான் என் மாமியாரை பராமரிக்கவில்லை என்றால் நானும், 3-ம் பிரதிவாதியும் சேர்ந்து தான் பராமரித்து வருகிறோம். என் மாமியார் சென்னை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற போது நான் சென்று பார்த்தேன். நான் மருத்துவமனையில் என் மாமியாருடன் சில நாட்கள் தங்கியிருந்து அவருக்கு உதவி செய்தேன். எத்தனை நாட்கள் தங்கியிருந்தேன் என்று ஞாபகமில்லை. என் மாமியார் திருவெற்றியூர் சுகம் மருத்துவமனையிலும், கோடம்பாக்கம் மெட்வே மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று வந்தார் என்றாலும் நான் அங்கு சென்று அவரை பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. 1993-ம் ஆண்டிலேயே என் கணவருக்குரிய பங்கிற்கு என் கணவர் பணத்தை பெற்றுக்கொண்டு குடும்பத்தை விட்டு சென்ற பிறகு 1 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு தொல்லை கொடுக்க வேண்டும் என்பதற்காகவும், சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காகவும் நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதியுடன் எனக்கோ, என் பிள்ளைகளுக்கோ விரோதம் எதுவும் இல்லை. 1-ம் பிரதிவாதி நல்ல உடல் மற்றும் மன நிலையில் இருந்த போது சொத்துகளை 3-ம் பிரதிவாதிக்கு உயில் ஆவணம் மூலம் 20.12.2021-ம் தேதி எழுதிக் கொடுத்துள்ளார் என்றாலும், அந்த விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் சரியல்ல. அவர் உயில் ஆவணம் எழுதவில்லை. வழக்கு சொத்துகளில் எங்களுக்குரிய பாகம் ஏற்கனவே

கொடுத்துவிட்டதால் வழக்கு சொத்துகளில் எனக்கோ, என் பிள்ளைகளுக்கோ எவ்வித பாகமும், உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் ஒரு பகுதியை சாலை பயன்பாட்டிற்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட போது நாங்கள் எங்களுக்கும் பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டு மனு கொடுத்தோம். இந்த வழக்கில் நில ஆர்ஜித அதிகாரியை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் தற்போது குடியிருந்து வரும் ஆற்காடு கே.கே நகரில் உள்ள வீடு என் கணவருக்கு கொடுக்கப்பட்ட ரூ.2 லட்சம் பணத்தை முதலீடு செய்து அதிலிருந்து வந்த வருமானத்தை கொண்டு கட்டப்பட்டது என்றால் அந்த வீடு எனக்கு சொந்தமான வீடு இல்லை. வாடகைக்கு குடியிருந்து வருகிறேன். அந்த வீட்டை கண்ணன் என்ற ஒப்பந்ததாரர் எனக்கு கட்டிக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. கண்ணன் என்பவர் அந்த வீட்டை பாபு என்பவருக்கு கட்டிக் கொடுத்துள்ளார். நான் அந்த வீட்டில் தான் வாடகைக்கு குடியிருக்கிறேன். கண்ணன் கட்டிக் கொடுத்த அந்த வீட்டையும் மற்றும் என் பெயரிலும், என் கணவர் பெயரிலும் உள்ள சொத்துகளை இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகளில் ஏற்கனவே பாகம் என் கணவருக்கு கொடுக்கப்பட்டுவிட்டதால் இந்த வழக்கில் நாங்கள் மீண்டும் பாகம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. 1–ம் பிரதிவாதி அவரது பிள்ளைகளை பராமரித்து திருமணம் செய்து வைத்ததில் இன்னமும் 15 லட்சம் கடன் செலுத்தப்பட வேண்டியது உள்ளது என்றால் என் மாமியார் கடன் எதுவும் வாங்கவில்லை. 1993–ம் ஆண்டிற்கு பிறகு நாங்கள் கூட்டுக்குடும்பமாக வசிக்கவில்லை என்றாலும், என் கணவர் கூட்டுக்குடும்பத்திற்கு எந்த வருமானத்தையும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.